உ
சிவமயம்

சந்நிதிப் பெருமானின் நேரடி நெறிப்படுத்தலில்
சமயவளர்ச்சி கருதி இவ்வெளியீட்டிதழ் உதயமாகியது



தொண்டைமானாறு

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின்

# அற்புதங்களும் அனுக்கிரகங்களும்

2015

- ஏழாவது வெளியீடு -

பரிபாலன சபை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# பொருளடக்கம்


| | |
|---|---|
| என் குறைதீர்த்த சந்நிதி வேலன் | 03 |
| சந்நிதி முருகன் துணை | 05 |
| எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதி முருகனின் சிறப்பு | 07 |
| சந்நிதி வேலன் திவ்ய பொக்கிஷங்கள் | 08 |
| சந்நிதிவேலன் ஆனந்தக்களிப்பு | 10 |
| மெய்ப்பொருள் நாயகன் சந்நிதிவேலன் | 12 |
| நாய்க்கும் அருள்வான் சந்நிதி முருகன் | 13 |
| சந்நிதிவேலவனின் தெய்வீக அதிசயம் | 14 |
| எம்மைக் காத்தான் சந்நிதி முருகன் | 15 |
| நடைபெற்ற திருப்பணிகள் | 17 |
| ஏன் செல்லக்கூடாது | 18 |
| ஆலய சூழலிலுள்ள ஆச்சிரமங்களும் மடங்களும் | 19 |


## நிர்வாக சபை

தலைவர் : திரு. ஆ. சிவசண்முகஐயர் J.P
செயலாளர் : Dr. சி. செல்வலிங்கம்
பொருளாளர் : திரு. வி. சுரேஸ்குமார்

**உறுப்பினர்கள்**

திரு. த. அகிலேந்திரஐயர்
திரு. த. பாலசுப்பிரமணியஐயர்
திரு. த. குகனேந்திரஐயர்
திரு. அ. லோகேஸ்வரன் ஐயர்
திரு. உ. ரமணன் ஐயர்
திரு. சி. செல்வக்கணேஷ் ஐயர்
திருமதி த. யோகேந்திரா
திரு. பா.சரவணன் ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசமரத்தடி அன்னதானக் கந்தனின் 2015ஆம் ஆண்டு மகோற்சவ பிரதமகுரு சிவஸ்ரீசெல்வகணேஸ்ஐயர் அவர்களின் ஆசியுரை



ஸ்ரீ செல்வச்சந்நிதியானின் வருடாந்த மகோற்சவத்தின் ரதோற்சவ திருவிழா அன்று வெளியிடப்படும் ஆற்றங்கரை யானின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும் எனும் அருமையான ஓர் சிறப்பு மலர் இவ்வாண்டு ஏழாவது முறையாகவும் வெளியிடப்படுகின்றது. மேலும் இவ்வாலயத்தை இந்து மக்கள் மட்டுமின்றி வேறு மதத்தவர்களும் செல்வச்சந்நிதி முருகப்பெருமானை தரிசிக்கின்றனர். சந்நிதியானிடம் குறைகளை தீர்க்க வரும் அடியவர்களுக்கு அக்குறைகளையும் நீக்கி அடியவர்களின் பசியினையும் தீர்த்து வைக்கிறார். உலகெங்கிலுமுள்ள முருகன் பக்தர்களுக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்க வேண்டுமென்று ஆசி வழங்குகின்றேன். இந்நூல் ஆலய பரிபாலன சபையினரால் வருடா வருடம் வெளியிட்டு வருகின்றனர். மேலும் மேலும் இம்மலர் ஒவ்வொரு மகோற்சவ காலத்திலும் வெளியிடப்பட வேண்டும். சந்நிதியானின் அற்புதங்கள் என்றென்றும் வளர வேண்டி நிற்கின்றேன்.

சந்நிதி வேலனின் திருவிளையாடல் தொடரும்

**உற்சவகால பிரதமகுரு**

**சிவஸ்ரீ சிவானந்தஐயர் செல்வகணேஷ் ஐயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றங்கரை வேலவனின் நிர்வாக சபைத்தலைவர் சிவஸ்ரீ ஆ. சிவசண்முகஜயர் J.P அவர்களின் வாழ்த்துச்செய்தி



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி வேலவனின் இரண்டாயிரத்தி பதினைந்தாம் ஆண்டுக்கான மகோற்சவ தேர்சிறப்பு மலராக சந்நிதி முருகப்பெருமானின் அற்புதங்களை-யும், விசேட சிறப்புக்களையும், நிர்வாக செயற்பாடுகளையும் தாங்கிவரும் இம் மலரினை எம்பெருமான் அடியார்கள் வாசித்து பயனடைந்து வேலவனின் அருளாசிபெற்று சீரும் சிறப்புமாக இல்வாழ்க்கைதனில் நல்பேற்றினைப்பெற்று எதிர்காலம் இன்புற்று இருக்க சந்நிதி வேல்பெருமான் நல்லருள் நல்குவாராக!.

சந்நிதிவேல் பெருமானை நம்பிக்கையோடு வணங்கி அவரின் அற்புதங்களை தாங்களும் அனுபவித்துக் கொள்ளுங்கள்.

நன்றி

-பரிபாலனசபை-
தலைவர்
திரு ஆ.சிவசண்முகஜயர் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குறைதீர்த்த சந்நிதி வேலன்

எனது பெயர் நடராசா அன்னலட்சுமி. நாங்கள் இருபாலையில் வசிக்கின்றோம். எனக்கு மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ளார்கள். மகள்மார் மூவரும் திருமணம் செய்து விட்டார்கள். ஆனால் மகனுக்கு முப்பத்தாறு வயது வந்தும் மாங்கல்யம் கிடைக்கவில்லை. நான் மகனை நினைத்து எல்லாக்கோயில்களுக்கும் போய் வருவேன். இப்படி இருக்கும் போது நானும் மகனும் 2010ம் ஆண்டு சந்நிதியானின் தேர்காணச் சென்றோம். அப்போது அற்புதங்களும் அனுக்கிரகங்களும் என்ற ஒரு புத்தகம் கிடைத்தது. அதை வாசித்ததும் முருகா எனது மகனுக்கு மாங்கல்யம் தா. நான் உன்னுடைய ஆலயத்தில் வந்து மகனுடைய தாலிகட்டு நிகழ்வை நடத்துவேன் என்று நேத்தி வைத்தேன். பின் ஆறு மாதத்திற்குள் மாங்கல்யம் கிடைத்தது. எனது மகனின் திருமண நிகழ்வு சந்நிதி ஆலயத்தில் என் மனம் குளிர நடந்தது. நல்ல மனதுக்குப் பிடித்த மருமகளும் கிடைத்து இப்போது இரண்டு பெண் பேரக்குழந்தைகளும் முருகன் தந்துள்ளார். 2010ம் ஆண்டில் இருந்து தவறாது தேர் காணச் செல்வோம். அன்று கிடைக்கும் அற்புதப் புத்தகத்தை எப்பாடுபட்டாவது வாங்கி வருவேன். அது படித்தால் மனதிற்கு ஒரு பெரிய ஆறுதல் கிடைக்கும். அத்தோடு யாராவது துன்பப்படும் போது அப்புத்தகத்தை போட்டோக் கொப்பி அடித்துக் கொடுப்பேன். அதைப் படிப்பவர்கள் என் மூலம் முருகன் கருணை கிடைத்ததாக நன்றி கூறுவார்கள். நான்கு வருடம் எனது நோய்க்கும் சிகிச்சை பெற்றேன். எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனால் இப்போது சிகிச்சையைக் கைவிட்டு மாதத்தில் ஒரு தடவையாவது சந்நிதியானின் அற்புத ஆற்றில் முழுகிக் குளித்து வருகிறேன். வைத்தியர் கூறிய நோய்களையும் சந்நிதியானின் ஆற்றில் இறக்கிவிட்டு சுகமாக இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2014**ம் ஆண்டு தேருக்கு நானும் மகளும் சென்றோம். இம்முறை முருகனின் அற்புதப் புத்தகம் கிடைக்குமா என்ற ஏக்கத்தில் சென்ற போது பஸ்சில் இருந்து இறங்கியவுடனேயே முருகனின் புத்தகம் கையிற்குக் கிடைத்தது. அப்புத்தகம் கிடைத்ததும் முருகன் நேரிலே வந்து கையில் இருப்பது போன்று பெருமகிழ்ச்சி அடைந்தோம். இவ்வாறாக சந்நிதி முருகனின் அருளிற்கும் அன்பிற்கும் அளவே இல்லை. எனவே நான் துயரத்தில் இருந்து விடுதலை பெற்றது போல் ஏனைய அன்பர்களுக்கும் முருகையாவின் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

இப்படிக்கு
ந. அன்னலட்சுமி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி முருகன் துணை

மாதகலில் வசித்த நான் சிறுவயதிலிருந்து சந்நிதிக்கு செல்வது வழக்கம். நாங்கள் முன்பு துணைசை முருகன் கோயிலிருந்து நடந்து பஜனையுடன் செல்கின்றனாங்கள். எனக்கு வவுனியாவிலிருக்கும் பொழுது கால்வருத்தம் ஏற்பட்டு எல்லா இடங்களில் வைத்தியம் பார்த்தும் மாறவில்லை. வவுனியா ஆயுள் வேத 4ம் கட்டை வைத்தியசாலையில் இருந்தேன். அதற்கும் சுகம் வரவில்லை. நடக்க முடியாத தருணத்திலும் எனது மனைவியுடன் முருகனின் சந்நிதியை நாடி வந்திருந்தேன். ஆற்றங்கரைக்குச் சென்றேன். அங்கே நின்ற ஒருவரின் உதவியுடன் இறங்கிக் குளித்துவிட்டு பின்பும் அவரின் உதவியுடனே மேலே வந்தேன். அதே போன்று 3 நாளும் ஒவ்வொருவரின் உதவியுடன் குளித்துவிட்டு வந்தேன். 4வது நாள் நானே இறங்கி குளித்து நானே மேலே வந்தேன். அவ்வாறு எனது வாழ்வில் பல அற்புதங்கள் சந்நிதி முருகனினால் கிடைத்தது. இப்போதும் வெள்ளிக்-கிழமைகளில் கோயிலில் எண்ணெய் வேண்டி எனது காலில் பூசிக்கொள்வேன்.

இவ்வாறு ஒருநாள் சந்நிதி முருகன் கோயில் வாசலில் சிவகுமார் என்பவர் உமக்கு 1 மாதத்தின் பின்பு முருகனின் அருளால் அற்புதம் நிகழும் என்றார். நான் கதிர்காமத் தலத்திற்கு சென்ற போது அங்கு என்னுடன் வந்தவர்கள் நீராடச் சென்றார்கள். நான் மாத்திரம் முருகனிடம் எனது மனக்கவலைகளைச் சொல்லி அழுத போது ஒரு சிறுவன் எனது கையில் வேலைக் கொண்டு வந்து தந்தான். இது அனைத்தும் சந்நிதியான் செய்த அற்புதங்களாகும்.

ச.ராஜேஸ்வரன்,
146,குட்சைட் வீதி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலவனே வேலவனே வேல்முருகா
வெற்றி வடிவேலவனே பாலகனே வேல் முருகா
வேலைக்கையில் ஏந்தி ஆடும் வேலவனே வேல் முருகா
வினைகள் எல்லாம் தீர்த்தருளும் வேலவனே வேல் முருகா
பச்சைமயில் வாகனனே பாலகனே வேல் முருகா
அச்சம் தீர்த்து எனை ஆளும் ஆண்டவனே வேல் முருகா
குன்றத்தில் குடிஇருக்கும் தெய்வம் எங்கள் தெய்வம்
குறவள்ளியை மணம் முடித்த தெய்வம் எங்கள் தெய்வம்
அம்பிகையின் பாலனுக்கு கோடி கோடி கும்பிடு
அற்புத வேலனுக்கு கோடி கோடி கும்பிடு
கந்தசுவாமி கடவுளுக்கு கோடி கோடி கும்பிடு
கருணைவடி வேலனுக்கு கோடி கோடி கும்பிடு
குன்றில் ஆடும் குமரனுக்கு கோடி கோடி கும்பிடு
குழந்தை வடிவேலனுக்கு கோடி கோடி கும்பிடு.

*இம் மலருக்கான சந்நதியானின் அற்புதங்களை நேரில் அனுபவித்த எம் பெருமான் அடியார்கள் அவ் அருள்பொங்கும் சம்பவங்களை இறை அன்போடு எழுதி* **ஆலயபரிபாலன சபை [மலர்] செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்.** *எனும் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

*மேலும் இவ் மலர் வெளியீடு செய்ய மலருக்கான அன்பளிப்பு செய்ய விரும்பும் அடியார்கள் " அறக்கட்டளை நிதியம்" மக்கள் வங்கி க/கு இலக்கம் 285-200100018920 என்ற இலக்கத்திற்கு நிதியினை செலுத்தலாம்.*


*"என்றும் இந்துவாகவே வாழ்வோம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்நிதியும் தரும் செல்வச்சந்நிதி முருகனின் சிறப்பு

எங்கேயும் தேடித் தேடி அலைந்தேன்
கிடைத்தது ஒரு நிதி
அதுதான் எங்கள் சந்நிதி
அதில் எழுந்தருளுகின்ற முருகன்
பூவரச மரத்தடியில் கோயில் கொண்டவர்
தொண்டமனாற்றங்கரையில் குடி கொண்டவர்
ஆலமிலை அமுதும் திருநீறும்
அடியவர் பிணி தீர்க்கும் மருந்தாகும்
தொண்டைமனாற்றின் மகிமையோ தனிச்சிறப்பு
தீராத நோய்களை தீர்த்து வைக்கும் ஆறு
எம் சந்நிதி முருகனை மனதில் நிறுத்தி
வணங்கி வந்தால் துன்பங்கள் பறந்தோடும்
எந்நிதியும் தருவான் எங்கள் சந்நிதியான்
அவன் தாள் என்றும் பணிவோம்.



தி. கீர்த்திகா
புளியங்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி வேலன் திவ்ய பொக்கிஷங்கள்

நெஞ்சங்கள் நெகிழ்ந்து உருக தஞ்சம் தரும் சண்முகனின் இயல்சேர் பெருமை என்னவென்றால், மெய்த் தொண்டராகிய கதிர்காமர் வழி வந்த தினத்திற்குரிய பூசகர் பூஜை, அபிசேக ஆரம்பத்திலும் ஆலயத்துள் உள்ள கருவறையில் ஸ்நானம் பண்ணி புறத்தூய்மை ஆகி அனுட்டானம் செய்து அகத்தூய்மையும் பெற்று ஞான வழிக்குரிய வெண் துகிலால் வாய் மூடப்பெற்று படிக்கட்டு அபிசேகம் முதலியவை தவறாது ஒழுக்க சீலராய் நெறி தவறாது ஒவ்வொரு நேர அபிசேகத்திலும் செய்து வருவதேயாம். இப் பெருமைக்குரிய விடயங்களினால் வேலவன் அருள் பெருகுவதும் பாரிய நேர்த்திகளை செய்து எந்நாளிலும் நேர்த்திக் கடன் முடித்து நன்மை பெற்று வரும் பெருந்திரள் மெய் அடியார்களையும் செல்வச்சந்நிதி வேலனின் சந்நதியிலே காணலாம்.

வியாழனிற்கு வியாழன் மாலைப்பொழுதில் உள்வீதி பூராவும் கழுவும் அணுக்க தொண்டரும், விழாக்காலங்களில் திரு கார்த்திகை உற்சவம், வள்ளி தேவயானை திருமண உற்சவம், மகோற்சவம் சார்ந்த இன்னும் விசேட விழாக்களிலும் எம்பெருமான் எழுந்தருள வீதி வலம் வரும் வேலனுக்கு சாத்துப்படிக்குரிய அடியிட்டு மலர் மாலைகள் தொடுத்து அலங்கரித்துக் கொள்வதும் அணுக்க தொண்டரே. சாத்துப்படி பீடத்துடன் ஆலயத்தினுள் எடுத்துச் சென்று வேலவனை பீடத்தில் இருத்தி ஆபாரணாதிய கலன்களைத் தரித்து மெருகூட்டி அருள் ஒளியை அள்ளி வீசப் பெருமானை புனைபவரும் மெய்த்தொண்டராகிய கதிர்காமரின் பரம்பரையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அப்பன் சந்நிதியில் அருளொளியாய் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் சாதிகுல பேதமின்றி விளங்கி நிற்கும் பேரருள் பெருமை சந்நிதிக்கே.

அபிடேகம் எத்தனையானாலும் ஒரே நேரத்தில் நிகழ்த்தி அருள்காத்த பெருமை கொண்டதும் சந்நிதியே. ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்பதும் சந்நிதியே.

எப்படித்தான் விரட்டிப் புரட்டி புறக்கணித்தாலும் சந்நிதி வாசலில் ஆலின் கீழிருந்து வரும் மிடிகொண்ட அடியார்களை அகற்ற முடியாது. அதிலும் மெய்யடியார்கள் வள்ளிக்குச் சமம். அருணகிரியார் "நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்நேரத்திலும் கோல குறத்தியுடன் வருவார்" என்பது போன்று சந்நிதி வாசலிலும் மெய்யடியார்கள் எந்நேரத்திலும் கூடி இருக்கும். இவையெல்லாம் சந்நிதியின் பொக்கிஷங்களே!

இவை மட்டுமா இன்னும் எத்தனையோ இருக்கின்றன. தீரா வியாதியுடனும், தீரா கவலையுடனும் வந்து அருள் பெற்று அனைத்தும் தீர்ந்து தன்னூர், தன்வீடு செல்ல அருள் தருவதும் சந்நிதியே.

**செல்வச்சந்நிதி முருகன் அடியான்**
**சு.ஜெயகோபாலசாமி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி வேலன் ஆனந்தக் களிப்பு!

நல்ல மருந்திம் மருந்து
சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து (நல்ல)

அறுபத்தைந் தாலிலை அமுதும் (2)
நோய் பிணி தீர்க்கு மருந்து
சந்நிதி வேலன் அருளி
இன்னமுதாக்கு நல்ல மருந்து

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

வேலனென்று சொன்னால் போதும் (2)
பேரின்ப சுகத்தினை அடியருக் கீயும்
ஜனன பிணி தனைப் போக்கும்

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

மூன்று காலமும் பூஜை (2)
கதிர்காமர் பரம்பரை வாய்கட்டி பூசை
ஞான பாத வழி நின்று (2)
பூஜை பண்ணிடும் முறைதனை
சந்நிதி காண்க
அனுதினம் அனுதினம் பூஜை
பண்ணிடும் முறைதனை சந்நிதி காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

ஞான பூஜை மகிழ்ந்து - வேலன்
அளித்திடும் திருவருள் கோடியுட் கோடி
அமுதினின் அருள்தரும் வேலன்
அருள் பெற்றோர் ஜெகத்தினில் கோடியுட்கோடி

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

வயிற்றுப் பிணிதனைப் போக்க (2)
இங்கே மகேஸ்வர பூஜை அனுதினமுண்டு
மருந்தையும் அருளையும் ஏற்க - சந்நிதி (2)
சந்நிதி வாங்க! சந்நிதி வாங்க!

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

வல்லையாற்று தீர்த்தத்தில் ஆடி
தொண்டை மானாற்று தீர்த்தத்தில் ஆடி
வலம் வந்து வேலன் திருவுரு காணில்
வல்வினை யாவும் பறந்தோடும் பாரில்

நல்ல மருந்திம் மருந்து - சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து
நல்ல மருந்திம் மருந்து

**ஸ்ரீ செல்வச்சந்நிதி முருக அடியான்**
**சு. ஜெயகோபாலசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ப்பொருள் நாயகன் சந்நிதிவேலன்

தேவ தேவன் மெய்ப்பொரு நாயகன் ஸ்ரீ செல்வச்சந்நிதி வடிவேலன்
தாச தாசன் சற்குரு நாயகன், சார்ந்தவர் வினை தீர்ப்பவன்
பால பாலன் பவம் தீர்க்க வல்லவன் குப்பாச வினை மல மூன்றையும்
பார்வை கொண்டே பறந்தோட செய்பவன் பாரினில் தொண்டை வேலவன்
(தேவ தேவன். . .)

கால காலனை காலா லுதைத்தவன் காம காமனை விழி வைத்தெரிந்தவன்
சக்தி ரூபமாய வடிவேலவன் சந்நிதி வந்து அமர்ந்தனன்
ஆவா என்று அலைபவற் கெல்லாம் அகப் பகை ஆறையும் களைந்தருள்வான்
இடையனாய் வந்து வேலை வழங்கி விளங்கா நின்றான் சந்நிதியாய்
(தேவ தேவன். . .)

எட்டு மிரண்டும் விளங்கு வெளியதாய் விளங்கிய சிவபெருஜோதியை
பட்டி மண்டபம் பாதத்திருத்தினாய் பிரணவப் பொருள் உரைக்கவே
வேட்டுவ குல பூசைதனை காட்டி புரியவும் செய்தனை புண்ணியரை
புண்ய பூமி ஈழ முடிமணி விளங்கு சந்நிதி கோயில்
(தேவ தேவன். . .)

சந்நிதியில் தூய ஸ்த்தம்பம், அருள் காவி வருகின்ற கும்பம்
சந்நிதியில் தூய ஸ்த்தம்பம், அங்கே தாவி வருகின்ற கும்பம்
வேண்டிய முற்றும் அளிக்கும், மேன்மை பெற்றுய்திட வைக்கும்
பார்ய மணியோசை கேட்டு, வேலன் பாதத்தை நீ தினம் நாடு
(தேவ தேவன். . .)

வேலன் தீர்த்தத்தை கைகளிலேந்து, ஏந்தி யாக்கை முழுவதும் பூசு
முருக விபூதி உச்சியில் போடு, உலைந்தோடும் துன்பமும் பாரு
சனி வாரம் முழுக்கு முழுகி, மாலை கருப்பட்டியுடன் பிட்டும்
நிவேதிக்கும் மரபு வழியும் தவறாது நிகழ்ந்திடும் அழகு.
"அற்புதம் அற்புதம் அற்புதம்", அற்புதம் அற்புதம் அற்புதம்"

**– சந்நிதி முருக அடியான் –**
**சு. ஜெயகோபாலசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்கும் அருள்வான் சந்நிதி முருகன்

நாயினும் கடையவனான நான் அன்றொரு நாள் 2011இல் என்று நினைக்கிறேன் ஐப்பசி மாதம் எம்பெருமான் ஸ்ரீசெல்வசந்நிதி முருகனின் ஆலயத்துள் மதிய பூஜை நேரம் கதிர்காமர் சமாதி கொண்ட பூவரசு மரத்தடியில் ஆற்று வாசல் பக்கம் ரெராசே நிலத்திற்கு போடப்படவில்லை. பழைய கொங்கிறீற்று நிலம் அதிலும் வெடிப்பு, அதிலும் ஓர் சிறு பள்ளம். அந்த பள்ளத்தை மூடி மேலாக நின்று வள்ளியம்மை பூசை நடந்து கொண்டிருக்கும். பூசையினில் லயித்து கண்மூடி வணங்கிக் கொண்டிருந்தேன். வள்ளிஅம்மை பூசை முடிந்து நாகதம்பிரானுக்கு பூசை நடக்கப் போகிறது. எனது முழங்காலுக்கு கீழாக எனது வேட்டியில், எனது வீட்டு நாய் உரேஞ்சி என்னைச் சுற்றி விளையாடுவது போன்று, ஓர் சிவப்பு நிறங் கொண்டவர், சாடையான சொறி நோய், ஆனால் உடல் கட்டும், வீரியமுங் கொண்டவர். உரேஞ்சி என்னை அவ்விடத்தில் இருந்து தள்ளி விட்டார். நானும் சற்று விலகி நின்று தம்பிரானின் பூசையை நோக்கினேன். அவரும் அந்த வெடிப்பின் பள்ளத்தின் மேலமர்ந்து முன்னங்கால்களிரண்டையும் தூக்கி வணங்கி கோசமும் இட்டுக் கொண்டார். தம்பிரான் பூசை முடிந்ததும் சென்று விட்டார். அதன் பின் தினமும் அவரை நோக்கியே வந்தேன். மதிய வேளை சனங்கள் இல்லாத வேளை அதே இடத்தில் அதே மதிய பூசைகளில் கலந்து கொள்ளுவார். அவர் பக்தி நிலையை என்னால் அளவிடவும் முடியவில்லை. என்று கண்டேனோ அன்றிலிருந்து 21ம் நாள் அவர் மறைந்து விட்டார் என்பது தான் எனது முடிவாகக் கொண்டேன். இது அதிசயத்திலும் அதிசயமான அற்புத நிலை இதுவும் முருகன் எனக்குக் காட்டிய அருளமுதமாகும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் இணையடியார்கள் வாழ்க.

**– ஸ்ரீசெல்வச்சந்நிதி முருக அடியான் –**

**சு.ஜெயகோபாலசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதி வேலவனின் தெய்வீக அதிசயம்

2011ம் ஆண்டு கந்தசஷ்டி விரத காலப்பகுதியில் கோவிலில் அமைந்திருந்த வேளை "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற புத்தகத்தினை வாசிக்க வாய்ப்புக் கிடைத்தது.

எனக்கு முதலாவது பிறந்த குழந்தை பெண் குழந்தை. இக்குழந்தை நோய்வாய்ப்பட்டு இருந்த காலத்தில் குழந்தைக்கு சுகம் ஏற்படும் வேளையில் அடுத்து வரும் கந்தசஷ்டி விரதத்திற்கு குழந்தையுடன் கோவிலில் வந்து 6 நாட்களும் கோவிலில் இருந்து விரதத்தை அனுஷ்டிப்பதாக வேண்டி இருந்தேன். அதேபோல் நோயும் சுகம் அடைந்தது. கந்தசஷ்டி காலப்பகுதியில் கோவிலுக்கு வந்து விரதத்தில் இருக்கும் பொழுது இந்த புத்தகத்தை நான் வாசித்தேன். வாசிக்கும் பொழுது எனக்கு அடுத்ததாக பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாக இருந்தால் முருகனின் "அற்புதங்களும் அனுக்கிரகங்களும்" என்ற புத்தகத்திற்கு ரூ 5000.00 நிதியுதவியளிப்பதாகவும் அந்தக் குழந்தையின் சகல நிகழ்வுகளும் முருகனுடைய கோவிலிலேயே செய்ய வேண்டும் எனவும் நேர்த்தி வைத்தேன். நான் நேர்ந்தது போல் அடுத்த வருடம் 2012.12.12ம் திகதி எனக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையின் நிகழ்வுகளையும் நான் முருகனின் சந்நிதியிலேயே செய்து வருகின்றேன்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதை நான் நன்கு உணர்ந்தேன். எத்துயர் வந்தபோதும் பெருமானை மறவாது தினம் தினம் அவர் நாமம் உச்சரித்து அருள் வேண்டி நின்றால் எமக்கு நிறைவான ஆசிகளும் அனுக்கிரகங்களும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

நன்றி

திருமதி யோகேஸ்வரன் சுமதி
சுதுமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைக் காத்தான் சந்நிதி முருகன்


எம்மைக் காத்தான் சந்நிதியான் கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற உண்மைக் கூற்றை யாராலும் மறுக்க முடியாது. இது எமது வாழ்வில் நிகழ்ந்த வேதனையும், சோதனையும் அதனை நிவர்த்தி செய்த எம் சந்நிதியான் எம் பெருமானின் பாதம் என்றும் வணங்குவோமாக. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் நாம் மிகவும் பாதிக்கப்பட்ட காலம் அது. எமது இறுதிநிலை என்னவாகிப் போகும். அடுத்த நாள் யார் உயிருடன் இருப்போம் என்று எண்ணியவாறு கந்தனின் கந்தசஷ்டி பதிகத்தை படித்துவிட்டு அடுத்த நாள் விடியலுக்காக காத்திருப்போம். அன்று இரவு எம் சந்நிதிப் பெருமான் கனவில் வந்து பொறுத்தனி ஒரு மாதம் பொறு என்று கூறினார். அடுத்த நாள் என் கணவன் குழந்தைகளிடம் சந்நிதிப்பெருமானின் கனவைப்பற்றிக் கூறினேன். இதன்பின் இன்னும் ஒரு நாள் கனவில் ஆதிபராசக்தி எமது வல்வை முத்துமாரி அம்மனைக் கண்டேன். சுவாமி வெளிவீதி வர ஆரம்பித்த போது கரகம் தீச்சட்டி என மக்கள் வெள்ளம் பெரும் தொகையானவர்களுடன் நாமும் வருகின்றோம். அப்போது 10வயது நிரம்பிய ஒரு குழந்தையின் கற்பூரச்சட்டி பெரிதாக பற்றிப்பிடித்தது. அப்போது நான் என்னால் முடிந்தளவு ஓம் சக்தி பராசக்தி சந்நிதியானே காப்பாற்று என்று அழுதபோது என் முன்னால் ஒரு தாயார் வந்து பயப்படாதே என்று கூறிவிட்டு பெரிய வெங்காயம், அப்பிள்பழம் இரண்டையும் உன் பிள்ளைகளுக்கு கொடு என்றார். நான் சந்நிதியானின் கனவு கண்டு சரியாக ஒரு மாதம் (20.04.2009)ம் திகதி பெருமளவான மக்களோடு நாமும் உயிர் பிழைத்தோம். வரும் வழியில் 10வயது நிரம்பிய ஒரு குழந்தையை இறந்த நிலையில் தாய் தூக்கி அழுது கொண்டிருந்தார். என் மனம் அடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை. இதன்பின் எமது சொந்த இடம் வந்துள்ளபோது எமது வீடு இருக்க முடியாது உடைந்து இருந்தது. இதனால் இருப்பதற்கு வீடு இல்லாது பெரும் துன்பப்பட்டோம். இந்நிலையில் என் சந்நிதிப்பெருமானின் தேர்த்திருவிழாவின் அனுக்கிரகம் நிறைந்த அற்புதம் நூல் என் கரம் எனது தாயார் மூலம் கிடைத்தது. என் மனதில் நிம்மதி கிடைத்தது போல் ஓர் உணர்வு, சந்நிதிப்பெருமானே அடுத்த திருவிழாவிற்குள் எனது துன்பம் விலகி விடிவு கிடைக்க வேண்டும் நீ என்னுடன் உண்மையில் இருந்தால் என வணங்கி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதம் நிறைந்த நூலில் 20ரூபாவை வைத்து படத்தட்டில் வைத்து விட்டு வணங்கி வருவேன். நான் எதிர்பார்க்கவில்லை. எமது வீட்டிற்கு ஒரு காவியுடன் ஒரு ஐயர் வந்து உன் துன்பம் எல்லாம் 3 மாதத்தில் நீங்கிவிடும் கவலைப்படாதே என்று கூறிவிட்டுச் சென்றார். அதேபோல் சந்நிதியானின் தேர்த்திருவிழாவிற்குள் எமது வசதிக்கேற்ப ஒரு வீடு காணியுடன் சொந்தமாக வேண்டினோம். எம் சந்நிதியானின் தேர் திருவிழாவிற்குள் இவ் அற்புதம் நடந்தது. இப்போது யாரினதும் தொந்தரவின்றி நிம்மதியாக எமது சொந்த வீட்டில் சந்நிதியானின் அருளினால் வாழ்கின்றோம். இறுதியாகவும் ஒரு கனவு கண்டேன். சந்நிதியானின் கோவிலுக்கு நான் போவதாகவும் அற்புதங்கள் நிறைந்த அனுக்கிரகங்கள் அடங்கிய நூலை ஒரு தாயார் என்னிடம் தந்து இதை உன்னிடம் கொடுக்கச் சொன்னார் என்றும் தந்தார். என்னால் நம்பமுடியவில்லை. அதில் எங்கும் என் சந்நிதியானின் அழகு நிறைந்த காட்சிகள். என் சந்நிதியான் என்றும் துணை நிற்பான். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

**ரஞ்சன் தயா குடும்பம்**
**சந்நிதியானின் பக்தர்**
**வல்வெட்டித்துறை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெற்ற திருப்பணிகள்

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேல் பெருமானின் அடியார்களினதும், ஆலய உரிமையாளர்களினதும் நிதிப்பங்களிப்புடன் சென்ற ஆண்டும் இவ் ஆண்டும் நடந்து முடிந்த திருப்பணிகள் பின்வருமாறு. ஆலய வள்ளியம்மன் வெளிவில் மண்டபம், மற்றும் நீராடிவிட்டு எப்பெருமான் அடியார்கள் ஆடை மாற்றுமிடம், ஆலயத்தில் ஒரே நாளில் பல திருமணங்கள் நடைபெறுவதால் மணப்பெண் கூறைமாத்துமிடம் புதிதாக மூன்று கட்டப்பட்டது. ஆலய கணனி அறை புதிதாக கட்டப்பட்டது. வள்ளியம்மன் கேணியின் மேல் கூரை வேலைப்பாடு செய்யப்பட்டது. வள்ளியம்மன் தீர்த்த கிணற்றடி மேல் கூரை வேலைப்பாடு செய்யப்பட்டது. பூமண்டப வடக்கு பக்கமாக மழை காலங்களில் ஏற்படக் கூடிய நீர் சிதறல்களை தடுப்பதற்கு கூரை அமைக்கப்பட்டது. விநாயகப் பெருமானுக்கான தேர்திருத்த வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. சுற்றுமண்டப தெற்கு பக்க நுழைவாயில் கட்டி முடிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. ஆலய உள்வீதியின் நான்கு பக்கங்களுக்கும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. விநாயகப் பெருமானின் வெளிமண்டபம் புதிதாக கட்டப்பட்டது. சரஸ்வதியம்மனுக்கு வர்ணப்பூச்சு வேலைகள் செய்வித்தமை, ஆலயத்தில் செயற்பாடுகளை கவனிக்க பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டமை ஆகிய திருப்பணிகள் திறம்பட செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனை விட மேலும் சில சிறிய திருத்த வேலைப்பாடுகளும் நடைபெற்றன. மேலும் பல திருப்பணிகள் நடைபெற இருப்பதால் எம்பெருமான் அடியார்கள் ஆலய திருப்பணியில் கலந்து சிறப்பித்து வேல்பெருமானின் அருள் ஆசிகளை பெற்றேகுமாறு வேண்டுகிறோம்.

– பரிபாலனசபை –

"அவனின்றி அணுவும் அசையாது"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் செல்லக் கூடாது?!

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப்பெருமான் ஆலய முன் மண்டபத்திற்கூடாக ஆலயத்தினுள் வணங்க செல்லக் கூடாது என்ற மரபு இங்கு உண்டு. இதற்குக் காரணமாக இங்குள்ள நந்தி மண்டபத்தில் நந்திக்கு பின்பக்கமாக உள்ள வாசல் ஊடாக வெளியேறுவதோ உள்செல்லுவதோ விடயம் தெரிந்த அடியார்களினால் தவிர்த்துக்கொள்ளப்படுகின்றது. ஏனெனில் இவ் நந்திக்கு பின் உள்ள இரு குந்துகல் உள்ளது. இவ் குந்துகல் இல் ஒரு பக்கம் முருகப் பெருமானும், மறு குந்துகல்லில் மருதர் கதிர்காமர் அவர்களும் இருந்து அடியார்களின் வேண்டுதல் பற்றியும், குறைநிறை பற்றியும் கதைத்துக் கொண்டிருப்பார்க்ள. ஆகவே அவர்கள் உரையாடிக் கொண்டிருப்பதால் பூசை நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரம் தவிர ஏனைய நேரங்களில் இவ் வாசலிற் கூடாக குறுக்கீடு செய்தல் ஆகாது. இவ் அற்புதம் அனைத்து எம்பெருமானின் அடியார்களும் தெரிந்து கொள்ள வேண்டும். இதனூடாக ஆலயத்தினுள் பிரவேசிப்பவர்கள் ஆலய முகப்பிற்கு அருகாமையில் உள்ள காண்டாமணி உள்ள கதிர்காம முகப்பு வாசல் வழியாக உள்வருதல் சாலச்சிறந்தது.

-சுபம்-



- பரிபாலனசபை -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய சூழலிலுள்ள ஆச்சிரமங்களும் மடங்களும்

எம்பெருமான் சந்நிதி வேல் பெருமானின் அடியார்களாகிய உங்களை ஆட்கொள்ளும் சந்நிதிவேலவன் தன் அடியார்களின் பசிதீர்க்கவும், ஞான அறிவு மேலோங்கவும், உயிர்களிடத்தில் அன்பு செலுத்தவும் அனைத்து திருவிளையாடல்களையும் செய்து வரும் வேலவனின் ஆலய சூழலில் ஆலய உரிமையாளர்களுக்கும் ஏனைய தனியாருக்கும் சொந்தமாகவும் பல ஆச்சிரமங்களும், மடங்களும் ஆலய சூழலில் இயங்கி வருகின்றது. அந்த வகையில் அவைகளின் பெயர்களை இம்மலரில் வெளிப்படுத்தி அனைத்து அடியார்களும் பயன்பெற தெரியப்படுத்துகின்றோம்.

***ஆலய உரிமையாளர்களின் மடங்களும் ஆச்சிரமங்களும்***

| பெயர் | உரிமையாளர் |
|---|---|
| மெத்தை வீட்டு கந்தசாமி ஐயர் மடம் (சந்நிதியான் அன்னதான சபை) | திரு க.உலகுருநாதஐயர் |
| தகரமடம் (விசாகரத்தின ஐயர் மடம்) | திரு வி.தெய்வேந்திர ஐயர் J.P |
| வைத்திலிங்கம் மடம் | திரு த.பாலசுப்பிரமணியம் ஐயர் |
| ஓம் ஸ்ரீ சந்நிதியான் ஆச்சிரமம் (வ.சிவானந்த ஐயர் ஞாபகார்த்தம்) | திருமதி. பாலகிஸ்ணன் செல்வராணி |
| சந்நிதியான் வேதாந்த ஆச்சிரமம் (பொ.பாலேந்திர ஐயர் ஞாபகார்த்தம்) | திருமதி. சுரேஸ்குமார் வசந்தி |
| வள்ளி தெய்வானை மணிமண்டபம் | திரு சி.செல்வமணி ஐயர் |
| அரசம்மா மடம் | திருமதி. வனஜா கஜன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏனைய தனியாருக்கு சொந்தமான மடங்களும் ஆச்சிரமங்களும்

| | |
|---|---|
| அடியார் மடம் | தனியார் |
| சந்நிதியான் ஆச்சிரமமடம் (சந்நிதியான் ஆச்சிரமம்) | தனியார் |
| மணியம் மடம் | புஸ்பநாதன் |
| கந்தன் கருணை மடம் | தனியார் நிர்வாகம் |
| அமுத சுரபி மடம் | தனியார் நிர்வாகம் |
| சாத்திரியார் மடம் (சாத்திரியார்) | தனியார் |
| ஓம் சரவணபவ மண்டபம் | தனியார் நிர்வாகம் |
| திருத்தொண்டர் மடம் | தனியார் |

இப்படியாக ஆலய சூழலில் 7 மடங்கள் ஆலய உரிமையாளர்களினதும் 8தனியார்களினதும் சொந்தமான மடங்களாகவும் இயங்கி மகோற்சவ காலங்களிலும், கந்தசஷ்டி காலங்களிலும் ஏனைய விசேட உற்சவ தினங்களிலும் சேவையாற்றி வரும் வேளையில் சந்நிதி வேல் பெருமான் ஆலயத்திலும் அடியார்களின் உதவியுடன் நித்திய அன்னதானப்பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ் நித்திய அன்னதானப் பணியினை எம்பெருமான் அடியார்கள் ஆலய உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு இப்பணியை செய்து வருகின்றனர்.

இவ் நித்திய அன்னதானப்பணி மேலும் சிறப்புற
"நித்திய அன்னதானப்பணிநிதி"
கொமர்சல் வங்கி
க/இல 0810803633

(தொடரட்டும் அவன் பணி)

– பரிபாலனசபை –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. ARIARATNAM & CO.**
CHARTERED ACCOUNTANTS

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் - திருப்பணிச் சபை

31.12.2014 இல் உள்ளவாறான ஐந்தொகை

திரண்ட நிதி

| | | |
|---|---|---|
| 01.01.2014இல் உள்ள மீதி - இரும்பு பெட்டி,பவுண், வங்கி , காசு மீதி | 1,387,675.45 | |
| இவ் ஆண்டு செலவிலும் கூடிய வருமானம் | 1,209,170.36 | 2,396,845.81 |
| | | 2,396,845.81 |

பிரதிநிதிப்படுத்தல்

| | | |
|---|---|---|
| நிலையான சொத்து - இரும்பு பெட்டகம் | | 74,500.00 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | |
| பொருள் இருப்பு பவுண் | 368,230.00 | |
| இலங்கை வங்கி சேமிப்பு கணக்கு 7345848 | 848,297.01 | |
| இலங்கை வங்கி சேமிப்பு கணக்கு 72090184 | 179,139.31 | |
| செலான் வங்கி சேமிப்பு கணக்கு 0138424 | 30,430.34 | |
| காசுக் கையிருப்பு | 896,249.15 | 2,322,345.81 |
| | | 2,396,845.81 |

தலைவர் செயலாளர் பொருளாளர்

31.12.2014 இல் உள்ளபடியான ஐந்தொகையும் 31.12.2014இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக்கணக்கும், பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கும் வரவு சீட்டைகள், வங்கி சேமிப்புப்புத்தகம் கொடுப்பனவு உறுதிச்சீட்டைகள், காசேடு பேரேடு ஆகியவற்றுடன் எம்மால் சரிபார்க்கப்பட்டது. காசுக்கையிருப்பு எம்மால் எண்ணிச் சரிபார்க்கப்படவில்லை

எங்கள் அபிப்பிராயப்படி மேலே தரப்பட்டுள்ள ஐந்தொகையும் வருமானச் செலவுக் கணக்கும் இத் திகதியிடப்பட்ட எமது அறிக்கைக்கு அமைவாக ஆலயத்தின் நிதி நிலைமையை சரியாக பிரதிபலிக்கின்றது.

யாழ்ப்பாணம்
16.02.2015

V. ARIARATNAM & CO. CHARTERED ACCOUNTANTS JAFFNA

வே. அரியரெட்ணம் அன் கம்பனி
பட்டயக்கணக்காளர்கள்

NO. 48-3B 1/1, Dharmarama Road,
Colombo - 06.
TEL : 011 2508194, 011 2598326
FAX : 011 2506194
E-MAIL : variam@sltnet.lk

V. ARIARATNAM F.C.A. FSCMA
S. RAVEENDRANATHAN F.C.A

BRANCH :
NO.245, KASTHURIAR ROAD,
JAFFNA.
TEL : 021 2226372
E-MAIL : ariamjaffna@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. ARIARATNAM & CO.**
CHARTERED ACCOUNTANTS

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் - திருப்பணிச் சபை

### 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச்செலவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| **வருமானங்கள்** | | | |
| திருப்பணி நிதி வரவு | | | |
| காசு | | 3,574,920.00 | |
| பவுண் | | 30,350.00 | |
| இலங்கை வங்கி நேரடி வைப்பு | | 504,615.00 | |
| உண்டியல் வரவு | | 1,272,452.00 | |
| ஆலய நில வாடகை | | 23,480.00 | |
| மின்சார வரிப்பண வரவு | | 17,800.00 | |
| இலங்கை வங்கி வட்டி | 7345848 | 21,512.04 | |
| இலங்கை வங்கி வட்டி | 72090184 | 7,012.64 | |
| செலான் வங்கி வட்டி | | 1,153.68 | |
| அறக்கட்டளைக்கான அன்பளிப்பு | | 36,800.00 | |
| கடைகள் வரிப்பணம் | | 15,880.00 | 5,505,975.36 |
| **செலவுகள்** | | | |
| பராமரிப்பு செலவு | | 64,921.00 | |
| தேர்த் திருவிழாச்செலவு | | 43,774.00 | |
| விழிப்புலனற்றோர் அன்பளிப்பு | | 26,000.00 | |
| மாணவர்களிற்கான உதவித்தொகை | | 244,300.00 | |
| திருப்பணி ஊழியர் சம்பளம் | | 227,000.00 | |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | | 220,200.00 | |
| அம்மன் வசந்தமண்டப வேலை | | 713,390.00 | |
| நாவலர் மண்டப வேலை | | 117,590.00 | |
| திருமண மண்டப வேலை | | 27,605.00 | |
| காணிதாதி செலவு | | 10,860.00 | |
| ஆண்கள் ஆடை மாற்றுமிட திருத்த வேலை | | 124,720.00 | |
| வாகன கூலி | | 30,050.00 | |
| கட்டட வேலைக்கான மூலப்பொருள் | | 792,273.00 | |
| கட்டட வேலைக்கான கூலி | | 229,784.00 | |
| தோட்டப் பசளை | | 38,485.00 | |
| தொலைபேசி கட்டணம் | | 16,505.00 | |
| மின்கட்டணம் | | 60,500.00 | |
| திருப்பணி பணிமனை கூலி | | 20,000.00 | |
| மலசலகூடம் கட்டிய செலவு | | 36,820.00 | |
| நீர்த்தொட்டி தண்ணீர் கட்டணம் | | 14,967.00 | |
| பைப் லைன் செலவு | | 255,715.00 | |
| கண்காணிப்பு கமெரா | | 215,850.00 | |
| பெயின்ரிங் வேலை | | 4,450.00 | |
| தேர் வேலை | | 194,487.00 | |
| மின் உபகரணம் | | 67,880.00 | |
| கல் மற்றும் பொருள் | | 14,680.00 | |
| உற்சவ கால எரிபொருள் | | 103,277.00 | |
| உபகரணங்கள் கொள்வனவு (அலுவலகம்) | | 36,065.00 | |
| புத்தக வெளியீடு | | 88,200.00 | |
| அன்பளிப்பு | | 25,246.00 | |
| பிள்ளையார் முன் மண்டப வேலை | | 231,208.00 | 4,296,805.00 |
| செலவிலும் கூடிய வருமானம் | | | 1,209,170.36 |

NO. 48-3B 1/1, Dharmarama Road,
Colombo - 06.
TEL : 011 2506194, 011 2598326
FAX : 011 2506194
E-MAIL : variam@sltnet.lk

V. ARIARATNAM F.C.A, FSCMA
S. RAVEENDRANATHAN F.C.A

BRANCH :
NO.245, KASTHURIAR ROAD,
JAFFNA.
TEL : 021 2226372
E-MAIL : ariamjaffna@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V. ARIARATNAM & CO.**
**CHARTERED ACCOUNTANTS**

**தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் - திருப்பணிச் சபை**
**31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| **ஆரம்ப மீதிகள்** | | | |
| இலங்கை வங்கி கணக்கு | 7345848 | 322,169.97 | |
| இலங்கை வங்கி கணக்கு | 72090184 | 172,126.67 | |
| செலான் வங்கி | | 29,276.66 | |
| பவுண் | | 337,880.00 | |
| காசுக்கையிருப்பு | | 251,722.15 | 1,113,175.45 |
| **வருமானங்கள்** | | | |
| திருப்பணி நிதி வரவு | | 3,605,270.00 | |
| உண்டியல் வரவு | | 1,272,452.00 | |
| ஆலய நில வாடகை | | 23,480.00 | |
| மின்சார வரிப்பண வரவு | | 17,800.00 | |
| அறக்கட்டளைக்கான அன்பளிப்பு | | 36,800.00 | |
| செலான் வங்கி வட்டி | | 1,153.68 | |
| இலங்கை நேரடி வைப்பு நன்கொடை | | 504,615.00 | |
| பெற்ற கடன் | | 400,000.00 | |
| இலங்கை வங்கி வட்டி | | 28,524.68 | |
| கடைகள் வரிப்பணம் | | 15,880.00 | 5,905,975.36 |
| **செலவுகள்** | | | |
| பராமரிப்பு செலவு | | 64,921.00 | |
| தேநீர் சிற்றுண்டிச்செலவு | | 43,774.00 | |
| விழிப்புலனற்றோர் அன்பளிப்பு | | 26,000.00 | |
| மாணவர்களிற்கான உதவித்தொகை | | 244,300.00 | |
| திருப்பணி ஊழியர்சம்பளம் | | 227,000.00 | |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் சம்பளம் | | 220,200.00 | |
| அம்மன் வில்லுமண்டப வேலை | | 713,390.00 | |
| நாவலர் மண்டப வேலை | | 117,590.00 | |
| திருமண மண்டப வேலை | | 27,605.00 | |
| காகிதாதி செலவு | | 10,860.00 | |
| ஆண்கள் ஆடை மாற்றுமிட திருத்த வேலை | | 124,720.00 | |
| வாகன கூலி | | 30,050.00 | |
| கட்டட வேலைக்கான மூலப்பொருள் | | 792,273.00 | |
| கட்டட வேலைக்கான கூலி | | 229,784.00 | |
| நோட்டீஸ் பலகை | | 38,485.00 | |
| தொலைபேசி கட்டணம் | | 16,505.00 | |
| மின்கட்டணம் | | 60,500.00 | |
| திருப்பணி பண்டிகை கூலி | | 20,000.00 | |
| மலசலகூடம் கட்டிய செலவு | | 36,820.00 | |
| நீர்த்தொட்டி தண்ணீர் கட்டணம் | | 14,967.00 | |

NO. 48-3B 1/1, Dharmarama Road,
Colombo - 06.
TEL : 011 2506164, 011 2596326
FAX : 011 2506164
E-MAIL : variarn@sltnet.lk

V. ARIARATNAM F.C.A, FSCMA
S. RAVEENDRANATHAN F.C.A

BRANCH :
NO.245, KASTHURIAR ROAD,
JAFFNA.
TEL : 021 2225372
E-MAIL : ariamjaffna@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V. ARIARATNAM & CO.
CHARTERED ACCOUNTANTS

| | | | |
|---|---|---|---|
| பைப் லைன் செலவு | | 255,718.00 | |
| கண்காணிப்பு கமெரா | | 215,850.00 | |
| பெயின்ரிங் வேலை | | 4,450.00 | |
| தேர் வேலை | | 194,487.00 | |
| மின் உபகரணம் | | 67,880.00 | |
| கலா மன்ற பொருள் | | 14,680.00 | |
| உற்சவ கால எரிபொருள் | | 103,277.00 | |
| உபகரணங்கள் கொள்வனவு (அலுவலகம்) | | 36,065.00 | |
| புத்தக வெளியீடு | | 88,200.00 | |
| அன்பளிப்பு | | 25,246.00 | |
| கொடுத்த கடன | | 400,000.00 | |
| பிள்ளையார் முன் மண்டப வேலை | | 231,208.00 | 4,696,805.00 |
| | | | 2,322,345.81 |
| | | | |
| இறுதி மீதிகள் | | | |
| இலங்கை வங்கி கணக்கு | 7345848 | 848,297.01 | |
| இலங்கை வங்கி கணக்கு | 72090184 | 179,139.31 | |
| செலான் வங்கி | | 30,430.34 | |
| பவுண் இருப்பு | | 368,230.00 | |
| காசுக்கையிருப்பு | | 896,249.15 | 2,322,345.81 |

NO. 48-3B 1/1, Dharmarâma Road,
Colombo - 06.
TEL : 011 2506194, 011 2598326
FAX : 011 2506394
E-MAIL : variam@sltnet.lk

V. ARIARATNAM F.C.A, FBCMA
S. RAVEENDRANATHAN F.C.A

BRANCH :
NO.245, KASTHURIAR ROAD,
JAFFNA.
TEL : 021 2225372
E-MAIL : ariamjaffna@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணிகள் பற்றிய அறிவித்தல்

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் தொண்டைமானாறு எம்பெருமான் அடியார்களே அன்பு வணக்கம்! எம்பெருமான் ஆலய திருப்பணி வேலைகள் அடியார்களாகிய உங்களின் மனம் விரும்பிய பங்களிப்புக்கள் மூலம் நிறைவடைந்துள்ளது.

மேலும் எஞ்சியுள்ள திருப்பணிகளான ஆலய தீர்த்த கேணி மண்டபம் அமைத்தல் மற்றும் தேர்முட்டி 1986யுத்தகாலத்தில் எரியூட்டப்பட்டதன் விளைவாக இன்று அதன் பலம் கேள்விக்குறியாகியுள்ளது. இருந்தபோதும் இத் தேர்முட்டியிலே தற்போது எம்பெருமானின் மூன்று தேர்களும் சப்பறமும் உள்ளது. இவற்றுக்கான சரியான இருப்பிடம் அமைப்பதற்கு பாரியளவு நிதி தேவைப்படும் என பொறியியலாளர்கள் கூறியுள்ளதால் அடியார்களாகிய உங்களது மனம் விரும்பிய பங்களிப்புக்களை எதிர்பார்க்கின்றோம். ஆலய திருப்பணிக்கு நிதி செலுத்த விரும்பும் அடியார்கள் ஆலய முன் மண்டபத்தில் அமைந்துள்ள திருப்பணி உண்டியலிலோ அல்லது அதற்கு அருகாமையிலுள்ள திருப்பணிக்காரியாலயத்திலோ செலுத்தி திருப்பணிப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுங்கள். வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் வாழும் பெருமான் அடியார்கள் இலங்கை வங்கி சேமிப்புக்கணக்கு இல 7345848இலும், யாழ் செலான் வங்கி இல 0850-01308424-101 இலும் செலுத்தலாம். வங்கியில் செலுத்தப்படும் பணத்திற்கு வழங்கப்படும் ரசிதினை அனுப்பி ஆலய திருப்பணிப்பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளுங்கள்.


மேலும் ஆலய பரிபாலன சபையானது அறக்கட்டளை நிதியத்தினூடாக பொருளாதாரம் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்வியை தொடர மாதாந்தம் கொடுப்பனவுகளை செய்து வருகின்றது. அதற்கான நிதியினை அறக்கட்டளை நிதியம் மக்கள் வங்கி பருத்தித்துறை கணக்கு இல 265- 063125-2எனும் இலக்கத்தினூடாக பங்களிப்புச் செய்யலாம்.

மற்றும் நித்திய அன்னதானப் பணிக்கான நிதியினை நித்திய அன்னதானப் பணி கொமர்ஷல் வங்கி நெல்லியடி கணக்கு இல 08108036333 என்னும் இலக்கத்தினூடாக அனுப்பி அதன் வங்கி ரசீதினையும் எந்தத்திகதி அன்னதானம் செய்ய வேண்டும் என்பதையும் பரிபாலன சபைக்கு அறியத்தரவும்.

மேலும் ஆலய சூழலில் இலவச வைத்திய சேவையும் சபை அனுசரணையும் நடைபெற்று வருகின்றது. எம்பெருமான் அடியார்கள் எம்பெருமானின் இது போன்ற கைங்காரியங்களில் நீங்களும் பங்குபற்றி எதிர்காலம் இன்புற்றிருக்க எம்பெருமான் நல்லருள் நல்குவாராக.

பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும் விபரங்கட்கு,
தலைவர்/ செயலாளர்,
ஆலய பரிபாலனசபை
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம்
தொண்டைமானாறு
காரியாலயம் : 021-3734392

வங்கி கணக்குகள் ஆலயதிருப்பணி
இலங்கை வங்கி : (பருத்தித்துறை - 7345848)
(வல்வெட்டித்துறை - 72090184)
செலான் வங்கி : (யாழ்ப்பாணம் - 0850-01308424-101)
அறக்கட்டளை நிதியம்
(மக்கள் வங்கி பருத்தித்துறை- 265-063125-2)
நித்திய அன்னதானப்பணி
(கொமர்ஷல் வங்கி நெல்லியடி - 8108036333)
நிர்வாக வைத்தியசேவைக்கான நிதி
(கொமர்ஷல் வங்கி நெல்லியடி - 81008036334)

Telephone - 0213734392, Intenet - www Sannathy.com
Email - sriselvasannathy@sannathy.com

தமிழ்ப்பூங்கா, தெல்லிப்பழை. - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org